


# அழகப்பா பல்கலைக்கழகம்

## தமிழ்ப் பண்பாட்டு மையம்

காரைக்குடி

மற்றும்

## தமிழ் நாடு தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

ஆய்வுக்கோவை



# பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் சே.செந்தமிழ்ப் பாவை

முனைவர் இரா.ஹேமலதா

ம.முனைவர் பொன். ஆதவன்

# பன்முக நோக்கில்
# கவியரசர் கண்ணதாசன்


<u>தொகுப்பாசிரியர்கள்</u>

முனைவர் **சே.செந்தமிழ்ப்பாவை**

முனைவர் **இரா.ஹேமலதா**

மதிப்புறு முனைவர் **பொன்.ஆதவன்**



<u>வெளியீடு</u>

அழகப்பா பல்கலைக்கழகம்

தமிழ்ப் பண்பாட்டு மையம்,

காரைக்குடி.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை<br>முனைவர் இரா.ஹேமலதா<br>மதிப்புறு முனைவர் பொன்.ஆதவன் |
| உரிமை | : | பதிப்பகத்தார்க்கு |
| நூல்பொருள் | : | ஆய்வுக்கோவை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாண்டு | : | 2025 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 530 |
| விலை | : | ரூ.500/- |
| வடிவமைப்பு | : | கா. குணசேகரன் (7639819399) |
| அச்சு | : | எஸ்.எஸ்.எண்டர்பிரைசர்ஸ்,<br>சென்னை (9940802363) |
| வெளியீடு | : | அழகப்பா பல்கலைக்கழகம்<br>தமிழ்ப் பண்பாட்டு மையம்,<br>காரைக்குடி.<br>9486550725, 8778911868 |
| ISBN No | : | 978-93-343-4478-3 |


ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை

14. கண்ணதாசன் கவிதைகளில் அறிவியல் சிந்தனை
செ. செல்வம் 137

15. கண்ணதாசன் கூறும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் இரா.ரம்யா 142

16. பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்
கு.திருமுருகானந்தன் 148

17. கண்ணதாசனின் இயேசு காவியம்: ஓர் உண்மை ஓவியம்
முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய், 158

18. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில்
திருக்குறள் பயன்பாடு
முனைவர் கா. சந்தானலெட்சுமி, 165

19. கண்ணதாசனின் மாங்கனி காவியத்தில் பாத்திரங்களின் ஆளுமை
- முனைவர் தே.தேன்மொழி 175

20. கண்ணதாசன் கவிதைகளில் சமூகச் சிந்தனை
க. உஷாநந்தினி 186

21. கண்ணதாசன் கூறும் 'நெஞ்சுக்கு நிம்மதி'
முனைவர் கே. இரா. கமலாமுருகன், 190

22. கண்ணதாசன் திரைப்படப் பாடல்களில் சொற்சிலம்பம்
முனைவர் க.மங்கையர்க்கரசி 197

23. கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில்
பெரிய புராண நாயன்மார்கள்.
வைத்திய கலாநிதி சி. சிவகலை. 203

24. கண்ணதாசன் பாடல்களில் எம்.ஜி.ஆர் ஆளுமை
கு.மு.ரமேஷ்பாபு & முனைவர் தே.தேன்மொழி, 209

25. கண்ணதாசன் பார்வையில் ஆன்மீகம்
முனைவர் செ.மார்கண்டன் 222

26. தமிழ் இலக்கியமும் கவியரசர் கண்ணதாசனும்
சு. கோபாலகிருஷ்ணன், 228

27. கவியரசு கண்ணதாசனின் பாடல்களில்
சங்க இலக்கியத்தின் தாக்கம்
மதிப்புறு முனைவர் ஜோதி மினாக்ஷி 234

28. கவியரசு கண்ணதாசனின் பாடல்களில் மகளிர்
திருமதி. இரா.இராஜாமணி. 240

# கண்ணதாசன் பாடல்களில் எம்.ஜி.ஆர் ஆளுமை

**கு.மு.ரமேஷ்பாபு**

முனைவர் பட்ட ஆய்வாளர், வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை-117.

**முனைவர் தே.தேன்மொழி,**

நெறியாளர் : உதவிபேராசிரியர்

வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை-117.

**முன்னுரை**

கண்ணதாசன் என்ற ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுக்க பொறுமை வேண்டும். மேலோட்டமாக வலை வீசி மீன் பிடிப்பதனால் உடனுக்குடன் செய்துவிடலாம். முத்தெடுக்க பொறுமையுடன் மூச்சடக்கி நீண்ட நேரம், பலமுறை முயற்சி செய்யவேண்டும். பரந்த கடல் மேல் பரவும் மேகம் அதன் நீரை தனக்குள் இழுத்துக்கொள்கிறது. பிறகு நீராக உள் வாங்கியதை மழையாகப் பொழிகிறது. அதைப் போலத்தான் கண்ணதாசன் என்னும் மேகம் தமிழாகிய கடலில் தான் உட்கொண்டவற்றைத் தன் பாடல் வரிகளில் எளிய மொழியில் மழையாகப் பொழிந்து தள்ளுகிறது. எம்.ஜி.ஆர்-க்கு உள்ள தனிப்பட்ட சிறப்பு தன்னைப் போற்றுவோருக்கு மட்டுமின்றி, கடுமையாக தூற்றுவோருக்கும் உதவிகள் செய்வார். சொல்லப் போனால், தன் மீது கல் வீசுவோருக்கு கனி தரும் மரம் போல, தன்னைக் கடுமையாக தாக்கிப் பேசுவோருக்கு அதிகமாகவே உதவுவார். அவர்கள் திறமையாளர்களாக இருந்துவிட்டால் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, அவர்களின் திறமைக்கு உரிய கவுரவமும் அங்கீகாரமும் அளிப்பார். இத்தகைய இருவரின் உன்னத தன்மையில் கண்ணதாசன் பாடல்களில் எம்.

ஜி.ஆரின் ஆளுமை எங்ஙனம் இருந்தது என்பதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**கண்ணதாசன்**

நாம் கம்பன், பாரதி, வள்ளுவன் ஆகியோரைப் பார்த்ததில்லை. அவர்களை தன் எளிய வரிகளின் மூலம் நமக்கு உணர்த்தியவர் கண்ணதாசன். பாரதியின் பொதுவுடைமை சிந்தனையும், சீர்கெடும் சமுதாயத்தைப் பற்றிய அக்கறையும் கவியரசரிடத்தில் மிகுந்து காணப்பட்டது. தன் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற பாடலில்,

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"

என்ற வரிகளில் தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் என்ற பாரதியின் சிந்தனையை எவ்வளவு அழகாக இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று கூறுகிறார். தாயகம் காப்போரின் தாள் பணிவோம் என்ற வரியில் பாரதி கொண்டிருந்த தேசப் பற்றும் புலனாகிறது.

இருட்டில் மறைந்து கொள்ள விளக்கணைப்பார்/சிலர் கிணற்றில் மறைந்து கொண்டு லகளப்பார் என்ற வரிகளில் பாரதியின், நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால் என்ற ஆதங்கம் புலப்படுகிறது.

எம்.ஜி.ஆர் நாடக கலைஞராக நாடகங்களில் நடித்து வந்த நடிகர் எம்ஜிஆர் படிப்படியாக முன்னேறி சினிமாவில் துணை கதாபாத்திரங்களில் நடிகராக நடிக்க துவங்கினார். அப்போது ஏற்பட்ட பல சிக்கல்களையும், தடைகளையும் தாண்டி தனது விடாமுயற்சியின் மூலமாக மிகப்பெரிய நாடக கலைஞராக நாடகங்களில் நடித்து வந்த நடிகர் எம்ஜிஆர் படிப்படியாக முன்னேறி சினிமாவில் துணை கதாபாத்திரங்களில் நடிகராக நடிக்க துவங்கினார். அப்போது ஏற்பட்ட பல சிக்கல்களையும், தடைகளையும் தாண்டி தனது விடாமுயற்சியின் மூலமாக மிகப்பெரிய ஹீரோவாக பிரபலம் அடைந்து மக்கள் மத்தியில் நீங்காத இடத்தை பிடித்தார். அதை தொடர்ந்து தமிழகத்தின்

முதல்வராகவும் ஆட்சி அமைத்து தமிழ் சினிமாவையே தன் கைக்குள் வைத்திருந்தார் எம்ஜிஆர். நடிகர் எம்ஜிஆர் சினிமாவிலும் சரி, அரசியலிலும் சரி மிகச்சிறந்த மனிதராக வலம் வந்தாலும் கட்சியில் அவருக்கு எதிராக பல சதி வேலைகள் நடந்திருந்தது. சினிமாவில் சுறுசுறுப்பாக பல படங்களில் நடித்து வந்த எம்ஜிஆர் அவர்கள் அண்ணாவின் திராவிட முன்னேற்ற கழகத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தார்.

**எம்.ஜி.ஆர் ஆளுமை**

எம்.ஜி.ஆர் அதிலும் தமிழகத்தின் முதல்வர். கண்ணசைத்தால் காரியம் செய்ய காத்திருப்போர் ஆயிரம் பேர். என்றாலும் கண்ணதாசனின் முகத்தை பொதுமக்கள் இறுதியாக பார்த்து அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதற்காக, தானே வேன் மீது ஏறினார் என்றால், கவிஞர் மீது அவர் கொண்டிருந்த அன்பும், எதையும் மக்களின் கோணத்தில் இருந்தே பார்க்கும் எம்.ஜி. ஆரின் நுண்ணறிவும் பிரமிக்கத்தான் வைக்கும்.

சினிமாவில் பொதுவாக பெண்களின் அழகைத்தான் கவிஞர்கள் வர்ணிப்பார்கள். ஆண்களின் அழகையும் வர்ணிக்க முடியும் என்றால் அது எம்.ஜி.ஆருக்குத்தான் பொருந்தும். 'குடும்பத் தலைவன்' படத்தில் 'கட்டான கட்டழகு கண்ணா, உன்னைக் காணாத பெண்ணும் ஒரு பெண்ணா?' என்று எம். ஜி.ஆரை வர்ணித்திருப்பார் கண்ணதாசன். எம்.ஜி.ஆரின் அழகை, ஆளுமையை 'நீதிக்குப் பின் பாசம்' படத்தில் இடம் பெற்ற ஒரு பாடலில், நாயகி பாடுவது போல கண்ணதாசன் விவரித்திருப்பார். அந்த வரிகள்,

> **'தேக்கு மரம் உடலைத் தந்தது**
> **சின்ன யானை நடையைத் தந்தது**
> **பூக்கள் எல்லாம் சிரிப்பை தந்தது**
> **பொன்னல்லவோ நிறத்தை தந்தது'**

என்ற இந்த வரிகளைப் படித்தாலே நினைவுக்கு வருபவர் எம்.ஜி.ஆராகத்தான் இருக்க முடியும். எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்த கண்ணதாசன் பாடல் 'மன்னாதி மன்னன்' படத்தில்

அவர் எழுதிய 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா...' என்பது எம்.ஜி.ஆர். காரில் செல்லும்போது அவர் கேட்டு ரசிக்கும் பாடல்களில் இந்த பாடல் தவறாமல் இடம் பெறும் தன்மை கொண்டது. டி.எம். சௌந்தரராஜனுக்குப் பதிலாக தன் படம் அடிமைப்பெண்ணில் எஸ்.பி.பாலசுப்பிரமணியை பயன்படுத்தினார். எம்.ஜி.ஆர், கே.ஜெ.ஏசுதாஸையும் பயன்படுத்தினார். அதுவும் நடந்தது. டி.எம்.எஸ்ஸிர்க்கு பாடல் வாய்ப்பு குறைந்தது. எம்.ஜி.ஆரை நம்பி கெட்டவர்கள் யாரும் இல்லை. ஆனால் நம்பாதவர்கள் வாழ்ந்ததில்லை. அதனால் தான் அண்ணாவே அவரை, தன் "இதயக்கனி"என அழைத்து பத்திரப்படுத்தி கொண்டார்.அந்த காலத்தில் வாழ்ந்தவர்களில் பலகோடி மனிதர்கள் எம்.ஜி.ஆரின் திருநாமத்தை பயன்படுத்தி பணம்-செல்வாக்கை எளிதாக அடைந்து ஆடம்பரமாக வாழ்ந்தனர். இன்றும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்

**எம்.ஜி.ஆர் சாதுரியம்**

இந்தப் படம் வெற்றியடைந்தால், நான் 'மன்னன்'; தோல்வியடைந்தால் நான் 'நாடோடி' என் எம்.ஜி.ஆர் சொன்ன 'நாடோடி மன்னன்' சொந்தப் படத்திற்கு வசனம் எழுதியவர் கண்ணதாசன். அவரின் பல வெற்றி பாடல்களைப் புனைந்தவர் கண்ணதாசன்; அவருடன் கருத்து வேறுபாட்டில் இருக்கும்போது கூட, மற்றவர்களால் பாடல் எழுத முடியாத காட்சிகளுக்கு, கண்ணதாசனிடம் பாடல் வாங்கி வரச் சொன்னவர் எம் ஜி ஆர்.

அரசவைக் கவிஞர் பதவிக்கு தமக்கு நெருக்கமானவராக வாலி இருந்தாலும், அவருக்கும் மூத்தவர், அவரைவிடத் திறம் வாய்ந்தவர் கண்ணதாசன் என்ற மரியாதை உண்டு. கவிஞர் அவமானப்படுத்தினாலும் எம்.ஜி.ஆர் அவரை தன்னோடு இணைத்து கொண்டதற்கு முக்கிய காரணம் கலைஞர்!

ஆரம்பத்தில் எம்.ஜி.ஆரின் திரை வாழ்க்கை கலைஞரை சார்ந்திருந்தது! "என் வசனங்கள்தான் ராமசந்திரனை உயர்த்தியது" என்று சொல்லாமல் சொன்னார் கலைஞர். கலைஞருக்கு பதிலடி

கொடுக்க கவியரசர்தான் சரியான நபர் என்பது எம்.ஜி.ஆருக்கு தெரியும். அதனால்தான் நாடோடி மன்னன் பட வசன பொறுப்பு கண்ணதாசனுக்கு வழங்கப்பட்டது!. அரசியலில் இணைந்தே தி.மு.க வில் பயணித்தாலும் கவிஞருக்கு "அரசியல் சாணக்கியம்" இல்லை! அண்ணாவை விட்டு ஈ.வி.கே.சம்பத் கட்சியில் இணைந்தார் கவிஞர்! கலைஞருக்கும் மகிழ்ச்சி, மக்கள் திலகத்திற்கும் நிம்மதி! நீண்ட நாள் கழித்து எம்.ஜி.ஆருக்கு கவிஞர் எழுதியது.

"அது அந்த பறவை போல வாழ வேண்டும். "இது போல உரிமை குரல் படத்தில் " விழியே கதை எழுது" இயக்குனர் ஸ்ரீதர் தயங்கி தயங்கி பாடல் வரிகளை எம்.ஜி.ஆரிடம் காண்பித்த போது, "இது ' ஆண்டவனின்' வரிகள் மாதிரி இருக்கே" (ஆண்டவன் : எம்.ஜி.ஆர் கண்ணதாசனை அப்படிதான் அழைப்பார்!) என்று கண்ணதாசன் அடையாளங் காணும் திறன் கொண்டவர். எம்.ஜி.ஆரும் திறம்பட சமாளித்தாலும், முரசொலியில் இலக்கிய தாக்குதல் நடத்தினார் சாணக்கியர். இந்த தாக்குதலுக்கு இலக்கிய ரீதியான பதில் சொல்ல கவியரசரால்தான் முடியும் என்பதால், அரசவைக்கவிஞர் பதவி கண்ணதாசனுக்கு கொடுத்தார் எம்.ஜி.ஆர்! பதவிக்கு வந்த சில மாதங்களில் காலம் கவிஞரை பறித்துக்கொண்டது! அரசியலில் எந்த பதவியையும் கவிஞர் அனுபவிக்கவில்லை! இறுதி காலத்தில் தேடி வந்த பதவி " அரசவை கவிஞர்! எத்தனை பதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இது சிறப்பிற்குரியது கவியரசு கண்ணதாசனுக்கு என்பதை மறுப்பதற்கில்லை.

**எம்.ஜி.ஆரின் பெருந்தன்மை**

புத்தர், ஏசு, நபிகள் நாயகம், அண்ணல் காந்தியடிகள் உள்ளிட்டோர். ஏகடியம் பேசியவர்களை, இழிவாகப் பேசியவர்களை தங்களுடைய அன்பினால் நல்வழிப்படுத்தினார்கள். அதே போல் எம்.ஜி.ஆரும் தன்னைப் பற்றி யார் இழிவாகப் பேசினாலும் அதை மறந்து புறந்தள்ளி அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கினார்.

கவிஞர் கண்ணதாசன், எம்.ஜி.ஆரை எதிர்த்து மேடைகளிலும், பத்திரிகை கட்டுரைகளின் வாயிலாகவும் வசைபாடிக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஒரு முறை நிதி உதவி தேவைப்பட்டது. உடனே, அவர் தொலைபேசி மூலம் எம்ஜிஆரைத் தொடர்பு கொண்டார். எம்ஜிஆரும் அவர் மீது எந்த கோபமும் கொள்ளாமல் அவருக்கு உடனே உதவி செய்தார். அதே போல் அவருக்கு மருத்துவ சிகிச்சைக்கு பல முறை உதவி செய்து அவரைக் காப்பாற்றினார். எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்த பிறகு கவிஞருக்கு அரசின் உயர் பதவியான அரசவைக் கவிஞர் பதவியை அளித்து அழகு பார்த்தார். இறுதியாக அவர் அமெரிக்காவுக்கு சிகிச்சை பெறச் சென்றபோது அதற்குண்டான அத்தனை செலவுகளையும் எம்.ஜி.ஆரே ஏற்றுக் கொண்டார்.

எம்.ஜி.ஆர், தன்னை சந்திக்க வரும் பலரையும், குறிப்பாக ரசிகர்கள் அனைவரையும் "சாப்பிட்டீர்களா' என்று அன்போடு விசாரிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு உடனே விருந்தளிக்கவும் ஏற்பாடு செய்வார். அவர்கள் சாப்பிட்ட பிறகே மற்ற விஷயங்களைப் பேசுவார். தொலைதூரத்திலிருந்து வரும் ரசிகர்களுக்கு அவர்கள் திரும்பி செல்வதற்கான தொகையும் கொடுத்து அனுப்புவார்.

எம்.ஜி.ஆர், எந்த நேரத்திலும் எளிதில் அணுகக்கூடியவராக இருந்தார். சாதாரண மனிதர் கூட அவரை தொலைபேசி மூலம் எளிதில் தொடர்பு கொள்ளலாம். திரை உலகில் இருந்த போதும் சரி, ஆட்சியில் இருந்த போதும் சரி அவர் ஒரு சாதாரண வாழ்க்கையை விரும்பி வாழ்ந்தார். அவர் திரையுலகில் இருந்தபோது உயர்ந்த வெளிநாட்டு கார்களை பயன்படுத்தி இருக்கிறார். ஆனால், தமிழக முதல்வரான பிறகு இந்தியத் தயாரிப்பான அம்பாசிடர் காரையே இறுதிவரை பயன்படுத்தினார். வெளிநாட்டு கார்கள் பயன்படுத்தும் வாய்ப்பு வந்தும் அதை அவர் ஏற்கவில்லை.

ஆண்டுதோறும் ஜனவரி 17-ஆம் தேதியன்று அவருடைய பிறந்தநாளை உலகம் முழுவதும் தமிழ் மக்கள் சிறப்பாக

கொண்டாடுவார்கள். ஆனால், அவரோ தன் பிறந்தநாளை கொண்டாடியதே இல்லை. எப்போதும்போல் சாதாரணமாகவே அன்றும் இருப்பார். மாறாக, அதற்கு முன் வரும் பொங்கல் திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார். அன்றைக்கு தன்னிடம் வேலை பார்ப்பவர்களுக்கும். அவர்கள் குடும்பத்தினருக்கும் புத்தாடைகளை அளிப்பார் அவர்கள் பொங்கலன்று அதை உடுத்தி வருவதைப் பார்த்து மகிழ்வார். அவர்களுடன் சேர்ந்து பொங்கல் விழாவைக் கொண்டாடுவார். அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவார். அனைவருக்கும் தன் கையால் பொங்கல் பரிசினை அளிப்பார்.

தேசத்தின் மீதும், தேசத் தலைவர்கள் மீதும் மிகுந்த மரியாதையும், பக்தியும் கொண்டவர் எம்.ஜி.ஆர். அவர் தனது ராமாவரம் தோட்டத்தில் உள்ள கொடிக்கம்பத்தில் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றுவார் அன்று, தோட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் இனிப்புக்கள்வழங்கி மகிழ்வார். தேசத்திற்காகப் போராடிய தலைவர்களை அவர் மிகவும் மதித்தார். திருப்பூர் குமரனின் மனைவியை ஆட்சிக்கு வருவதற்கு முன் நேரில் சந்தித்தார். அவருடைய ஏழ்மை நிலையைக் கண்டு மனம் வருந்தி அவருக்கு தொடர்ந்து உதவி செய்து வந்தார். எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்தவுடன் தியாகிகளின் உதவித்தொகையை உயர்த்தினார்.

கம்யூனிஸ்ட் தலைவரான ஜீவா என்கிற ப. ஜீவானந்தத்தின் மகனுக்கு அரசு வேலை அளித்து அவரை ஏழ்மை நிலையிலிருந்து மீட்டார் தியாகி கக்கனின் மருத்துவ சிகிச்சைக்கு உதவி செய்தார் அவரின் மறைவிற்கு பிறகு அவருடைய குடும்பம் கஷ்டப்படாமல் இருக்க குடும்பத்தினருக்கு பல உதவிகள் செய்தார். கக்கனின் வாரிசுக்கு அரசு வேலை அளித்தார்.

தியாகிகளுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தேடிச் சென்று உதவிகளை செய்திருக்கிறார் எம்ஜிஆர் இப்படி அன்பு, இரக்கம், தேச நலன் கொண்ட மக்கள் மனதில் நீங்காமல் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்ஜிஆரின் பெருந்தன்மை போற்றுதற்குரியது. (கே.மகாலிங்கம், எம்.ஜி.ஆரின் நேர்முக உதவியாளர், தினமணி-jan 2022))

## கண்ணதாசன் நெகிழ்ச்சி

1978-ஆம் ஆண்டில் கண்ணதாசனை 'அரசவைக் கவிஞர்' என்ற பதவியில் அமர்த்துவதாக மறைந்த முதல்வர் எம்ஜிஆர் அறிவித்தார். இது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. ஏனெனில், அதிமுக ஆளும்கட்சியாக மாறிய பின்னரும், கண்ணதாசன் விமர்சித்தே வந்தார். மனதில் பட்டதைப் பேசுவதும், எழுதுவதுமே கவியரசுவின் வாடிக்கை. அவரது மனம் வெள்ளை மனம். எதையும் மூடி மறைத்து தன்னை களங்கப்படுத்திக் கொள்ள கண்ணதாசன் விரும்பவில்லை.

இந்த நிலையில், தன்னை விமர்சனம் செய்தவருக்கே பதவியை எம்ஜிஆர் அறிவித்தது அரசுத் துறை வட்டாரங்களில் மட்டுமன்றி, அரசியலும் ஓர் இன்ப அதிர்ச்சிதான். இந்த அறிவிப்பை அரசாணையாக வெளியிடுவதற்கு முன்னர், கண்ணதாசனிடம் எம்ஜிஆர் கூறும்போது, "உங்களுடைய தகுதிக்கு இது ஒன்றும் பெரிய பதவியல்ல. ஆனால் என்னுடைய அதிகார வரம்பில் நான் செய்யக் கூடிய மரியாதை இதுதான். நான் இதை அறிவிக்கப் போகிறேன். நீங்கள் இதை மறுத்துவிடக் கூடாது" என்றார். இதற்கு கண்ணதாசனும். "நான் உங்களைப் புகழ்ந்ததாகவும், நீங்கள் அதற்கு விலை கொடுத்ததாகவும் ஊரார் பேசுவார்களே!" என்றார். இதைக் கேட்டு சிரித்த எம்ஜிஆர், " ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டே நாம் பயணம் போவதென்றால் ஊர் போய் சேர முடியாது" என்றார். பின்னர், கண்ணதாசன் மறுப்பு கூறாமல் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார். இந்த விஷயத்தை "கண்ணதாசன் பார்வையில் எம்ஜிஆர் என்ற நூலில் கண்ணதாசனே எழுதியிருந்தார்.

## எம்.ஜி.ஆரும் கண்ணதாசனும்

50,60 களில் எம்.ஜி.ஆர், சிவாஜி உள்ளிட்ட பல நடிகர்களுக்கும் காதல், தத்துவம், சோகம் என பல சூழ்நிலைகளும் பாடல்களை எழுதியவர் கவிஞர் கண்ணதாசன். குறிப்பாக காதல், சோகம், தாலாட்டு, விரக்தி உள்ளிட்ட சூழ்நிலை என்றாலே இசையமைப்பாளர்கள் கண்ணதாசனைத்தான் அழைப்பார்கள்.

எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் பல நூறு பாடல்களை கண்ணதாசன் எழுதியுள்ளார். சிவாஜிக்கு இவர் எழுதிய சோக மற்றும் தத்துவ பாடல்கள் சாகா வரம் பெற்றவை. இப்போதும் அந்த பாடல்கள் தமிழ்நாட்டில் எங்கோ ஒரிடத்தில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

சினிமாவில் பாட்டு எழுதுவது மட்டுமின்றி அரசியலிலும் கண்ணதாசனுக்கு ஆர்வம் அதிகம். காமராஜரை அதாவது காங்கிரஸ் கட்சியை அவர் ஆதரித்தார். ஆனால், எம்.ஜி.ஆரோ திராவிட அரசியலை ஆதரித்தார். காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தித்தான் திமுக அதாவது அண்ணா முதலமைச்சராக அமர்ந்தார். எம்.ஜி.ஆரும் திமுகவில் இருந்தார். பல அரசியல் மேடைகளில் திமுகவுக்கு ஆதரவாக பேசியுள்ளார். இதனால், சில அரசியல் மேடைகளில் எம்.ஜி.ஆரை விமர்சித்தும் கண்ணதாசன் பேசினார். இதில், கோபமடைந்த எம்.ஜி.ஆர் கண்ணதாசனை தனது படங்களில் பாடல் எழுத வைப்பதை நிறுத்திவிட்டு கவிஞர் வாலி பக்கம் சென்றார். ஒருகட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு ஆஸ்தான பாடலாசிரியராகவே வாலி மாறிப்போனார். அதேநேரம், திமுகவிலிருந்து எம்.ஜி.ஆர் விலகி அதிமுக எனும் புதிய கட்சியை துவங்கி முதல்வர் பதவியிலும் அமர்ந்தார்.

அப்போது அரசவை கவிஞராக கண்ணதாசனை நியமித்தார். ஏனெனில், கண்ணதாசனுக்கும் அவருக்கும் அரசியல்ரீதியாக கருத்து வேறுபாடு இருந்தாலும் கண்ணதாசனின் தமிழ் மீதும், அவரின் திறமை மீதும் அன்பும், மரியாதையும் வைத்திருந்தார் எம்.ஜி.ஆர். அதனால்தான் வாலியை நியமிக்காமல் கண்ணதாசனை நியமித்தார். இதைக்கேள்விப்பட்டவுடன் தனது குடும்பத்தினரிடம் 'எம்.ஜி.ஆர் என்னை செருப்பால் அடித்துவிட்டார். அவரை அவ்வளவு விமர்சித்து பேசியிருக்கிறேன். ஆனால், அரசவை கவிஞராக என்னை நியமித்துள்ளார். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். எம்.ஜி.ஆர் உயிரோடு இருக்கும்வரை அவர்தான் முதல்வராக இருப்பார்' என உணர்ச்சிவசப்பட்டு கண்ணதாசன் பேசினாராம். அவர் சொன்னது போலவே எம்.ஜி.ஆர் மூன்று முறை

முதல்வராக இருந்தார். முதல்வராகவே மறைந்தார். இந்த தகவலை கண்ணதாசனின் மகள் விசாலி கண்ணதாசனே 93 மேடையில் பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

1960ம் ஆண்டு தொடங்கி அடுத்த பத்து பதினைந்து ஆண்டுகள் தமிழ் திரைத்துறை கண்ணதாசனின் காலமாகத்தான் விளங்கியது. ஆனால் அவர் பாடல் எழுதத் தொடங்கிய காலத்தில் உடுமலை நாராயணகவிதான் திரையுலக கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்தார். அவரால் மட்டும்தான் நன்றாக எழுத முடியுமா என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை ஆரம்ப காலத்திலேயே கண்ணதாசனுக்கு இருந்தது. கள்வனின் காதலி திரைப்படத்தில் சில பாடல்கள் எழுதி விட்டு கலைஞரின் பராசக்தி திரைப்படத்தில் பாடல் எழுத வந்தார் கண்ணதாசன். பாட்டெழுத வாய்ப்பு கோரி வந்தவரை பராசக்தியின் பரபரப்பான கடைசி காட்சியான நீதிமன்ற காட்சியில், நீதிபதியின் அங்கியை மாட்டி நடிகராக உட்கார வைத்துவிட்டார்கள்.

கண்ணதாசன் கதை வசனம் எழுதி 1957-ல் வெளிவந்த மதுரை வீரன் திரைப்படத்தில் அவருக்கு 2 பாடல்கள் எழுத வாய்ப்பளிக்கப்பட்டது. எம்ஜிஆருக்கு கொள்கை பாடல்கள் எழுதுவதற்கு என ஒரு கவிஞர் பட்டாளம் உருவாகும் முன்பே கண்ணதாசன் பாடல்கள் எழுதினார். கண்மூடும் வேளையிலும் கலை என்ன கலையே'. 'பேசுவது கிளியா' என பாடல் எழுதினார் காதல் பாட்டெழுதிய அதே காலத்தில் மன்னாதி மன்னனில் 'அச்சம் என்பது மடமையடா' என புரட்சிப் பாடலையும் எழுதினார் கவியரசர்.

ஆயிரத்தில் ஒருவன் திரைப்படத்தில் கப்பலில் பாடப்படும் பாடலை பல கவிஞர்கள் எழுதினார்கள். எம்ஜிஆருக்கு எந்தப்பாடலும் திருப்தி அளிக்காததால் கடைசியில் கவிஞர் கண்ணதாசன் அழைக்கப்பட்டார். எம்ஜிஆரின் எண்ணமறிந்த கவிஞர் எழுதிய பாடல்தான் 'அதோ அந்த பறவை போல வாழவேண்டும்' என்ற பாடல். வானையும், மண்ணையும் பாடலில் ஒன்றிணைத்து எழுதினார். சுதந்திரம் பறிக்கப்பட்ட பல நாட்டு மக்களின் விடுதலைக்காக, 'அடிமை வாழும் பூமி

எங்கும் வேண்டும் விடுதலை' என்ற வரிகள் எளிமையாக கம்பீரமாக ஒலிக்கின்றன.

மக்கள்திலகம் எம்ஜி.ஆருக்கும், கவியரசர் கண்ணதாசனுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்த காலம் அது. இந்த நேரத்தில் எம்ஜி.ஆர் உறுதியாச் சொன்னார்."இந்தக் காட்சிக்கான பாடலை கண்ணதாசன்தான் எழுத வேண்டும். அவரால் மட்டுமே நான் நினைப்பதை வரிகளாகக் கொண்டு வர முடியும்." - எம். ஜி.ஆரின் இந்த திடமான வார்த்தைகளைக் கேட்டு சுற்றி இருந்த படக் குழுவினர் திகைத்துப் போனார்கள். "சங்கே முழங்கு" என்ற படத்திற்கான பாடல் அது..! மதுவின் தீமைகளை விளக்கி கதாநாயகன் எம்.ஜி.ஆர். பாடுவதாக வரும் பாடல்

**"ஒரு கையில் மதுவும் ஒரு கையில் மாதுவும்/**
**சேர்ந்திருக்கின்ற வேளையிலே என்**
**ஜீவன் பிரிய வேண்டும் - இல்லையென்றால்/என்ன**
**வாழ்க்கை நீ வாழ்ந்தாயென்றே**
**எனை படைத்த இறைவன் கேட்பான்.."**

கண்ணதாசன் எழுதிய இந்தக் கவிதை, எம்.ஜி.ஆருக்கும் தெரியும்..! அப்படி இருந்தும் தன்னை எம்.ஜி.ஆர் அழைத்து, மதுவின் தீமைகளை விளக்கி பாடல் எழுதச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார் கண்ணதாசன்...! மதுவினால் ஒரு மனிதன் படும் அவஸ்தைகளை மதுப் பழக்கம் இல்லாத ஒருவனால் , அனுபவித்து எழுத முடியாது. எனவேதான் தன்னை தேர்ந்தெடுத்து இந்தப் பாடலை எழுத அழைக்கிறார் எம்.ஜி. ஆர் என்பது கண்ணதாசனுக்கு தெளிவாக தெரிந்தது. "சிலர் குடிப்பது போலே நடிப்பார், சிலர் நடிப்பது போலே குடிப்பார்" பாடலுக்கான பல்லவியில்...கோப்பையிலிருந்து வழியும் மதுவாக, பொங்கி வந்து விழுந்தன வார்த்தைகள் ..!

**"மதுவுக்கு ஏது ரகசியம்?**
**அந்த மயக்கத்தில் எல்லா அவசரம்**
**மதுவில் விழுந்தவன் வார்த்தையை**
**மறுநாள் கேட்பது அவசியம் !"**
**"நாணமில்லை வெட்கமில்லை**
**போதை ஏறும் போது**

நல்லவனும் தீயவனே
கோப்பை ஏந்தும் போது"

இதைக்கேட்டு, "சபாஷ்!" என்று பரவசப்பட்டுப் போனார் எம்.ஜி.ஆர். இதை விட மதுவின் தீமைகளை எவரால் சொல்ல இயலும். மேலும்,

"புகழிலும் போதை இல்லையோ..
பிள்ளை மழலையில் போதை இல்லையோ..
காதலில் போதை இல்லையோ..
நெஞ்சின் கருணையில் போதை இல்லையோ..!
மனம் மதி அறம் நெறி தரும் சுகம் மது தருமோ..?
நீ நினைக்கும் போதை வரும்
நன்மை செய்து பாரு..
நிம்மதியை தேடி நின்றால்
உண்மை சொல்லிப் பாரு.. !"

சொல்லி முடித்து விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார் கண்ணதாசன். யாரிடம் எதை எப்படி

கேட்டு வாங்க வேண்டும் என்ற வித்தை எம்.ஜி.ஆருக்கு தெரிந்திருந்தது ; எந்தச் சூழ்நிலையானாலும் அதற்கேற்ற பாடல் எழுதும் வித்தை. கவிஞருக்கு எங்கிருந்து வந்தது ..?

"வட்டிக் கணக்கே வாழ்வென் றமைந்திருந்த
செட்டி மகனுக்கும் சீர்கொடுத்த சீமாட்டி..!
தோண்டுகின்ற போதெல்லாம் சுரக்கின்ற செந்தமிழே..
வேண்டுகின்ற போதெல்லாம் விளைகின்ற நித்திலமே..
உன்னைத் தவிர உலகில் எனைக் காக்க
பொன்னோ பொருளோ போற்றிவைக்க வில்லையம்மா..!
என்னைக் கரையேற்று ஏழை வணங்குகின்றேன்!"

என்று கண்ணதாசனே சொல்லி இருக்கிறார்.

**முடிவுரை**

கல்லாத நல்லவர்களின் கவனத்தையும் ஈர்க்கின்ற வரிகள்! படியாத பாமரர்க்கும் புரிகின்ற மொழிகள்! இதுதான் கண்ணதாசன்! கண்ணதாசன் என்னும் கவிதை ஏட்டை நாம்

புரட்டி இன்புற்றிருக்கும்போது. இறைவன் பாதியில் ஏட்டை பிடுங்கி மூடி வைத்து விட்டான். இறைவன் கொடியவன் என்று கவியரசர் பாடியது உண்மையாயிற்று. பல்லாயிரம் பாடல்கள் புனைந்திருப்பார் இன்னும். ஏதோ அவர் 54 வருடங்கள் இம்மண்ணில் இருந்து நம்மை மகிழ வைத்தது நமக்கு பாக்கியமே. "இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும் என்று எம்ஜிஆர் திரையில் பாடிய வரிகள் அவர் ஒருவருக்கு மட்டுமே பொருந்தும். ஆண்டவன் என்றொருவன் வெளியில் இல்லை; நம் அனுபவங்களில்தான் அவன் வாழ்கிறான்' என்ற கவியரசரின் தீர்க்க தரிசனம் இக்கவிதை வரிகளில் பலிச்சிடுகின்றது. அகவை ஐம்பதைத் தாண்டிய சில ஆண்டுகளில் மிக அவசரமாகத் தன் பூவுலக வாழ்வைக் கவிவேந்தர் நீத்தாலும், காலத்தை வென்ற தன் கவிதைகளாலும், திரையிசைப் பாடல்களாலும், இலக்கியப் படைப்புக்களாலும் அழியாப் புகழை நிறுவி அமரகவியாகிவிட்டார். காவியத் தாயின் இளைய மகன் என்று தன்னை உரிமையோடு அழைத்துக்கொண்ட கண்ணதாசன், இன்று தானே ஒரு காவியமாகித் தமிழர்கள் அனைவர் நெஞ்சிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றார். பைந்தமிழ் வளர்த்த அந்தக் கவியரசரின் புகழ் இவ்வையமுள்ளவரை நிலைத்து நிற்கும்; காலத்தை வென்று நிற்கும்.

**துணைநின்றவை**


1. கே.மகாலிங்கம், எம்.ஜி.ஆரின் நேர்முக உதவியாளர், தினமணி-jan 2022.
2. *https://cinereporters.com/what-happened-to-dhanush-idly-kadai-movie-why-opposes-in-tamil-cinema*
3. காவிரி மைந்தன், தினமணி




# அழகப்பா பல்கலைக்கழகம்

## தமிழ்ப் பண்பாட்டு மையம்

காரைக்குடி.

## தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்

இணைந்து நடத்திய

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

### நற்சான்றிதழ்

கு.மு. ரமேஷ்பாபு அவர்கள்

18.07.2025 அன்று **பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்** என்னும் பொருண்மையில் நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கண்ணதாசன் பாடல்களில் எம்.ஜி.ஆர். ஆளுமை என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கியமையைப் பாராட்டி நற்சான்று வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

**முனைவர் அ.செந்தில் ராஜன்**
பதிவாளர் - அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை**
இயக்குநர் - தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**முனைவர் இரா. ஹேமலதா**
தலைவர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்
இணைப்பேராசிரியர் (ம) தமிழ்த்துறைத் தலைவர்
அன்னை தெரசா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு.

**முனைவர் தா.நீலகண்டன்**
கௌரவ ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம்
மேனாள் தமிழாய்வுத் துறைத் தலைவர்,
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

**ம.முனைவர் பொன். ஆதவன்**
பொதுச் செயலாளர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம், திண்டிவனம்.

**தமிழ்த்திரு ஏ.பிரகாஷ்**
பொருளாளர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம், விழுப்புரம்.

**கவிஞர் கார்த்திக் திலகன்**
நிர்வாக ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம், கடலூர்.

**தமிழ்ச்செம்மல் கவிதை கணேசன்**
ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம், பண்ருட்டி.

**தொல்காப்பியத் தென்றல் இர.தேன்மொழி**
நெறியாளுகைச் செயலாளர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம், பெங்களூர்.